**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.376/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | முத்துகிருஷ்ணன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of August 2021.

நான் தற்போது விஜயநாராயணம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 14.08.2016 ம் ஆண்டு 11.30 மணியளவில் மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முருகன், தலைமை காவலர் ஜெயகுமார் மற்றும் நான் ஆகியோர்கள் தண்ணீர் இல்லாத அரசனார்குளத்தில் மணல் கடத்துவதாக கிடைத்த தகவலின் பேரில் ரோந்து செய்யும் போது மகேந்திரா நிஸான் TN 74 480 என்ற பதிவெண் கொண்ட வாகனம் அதிவேகமாக வந்தது வரும் போது அதை நாங்கள் மடக்கும் போது எங்கள் மீது மோதுமாறு வந்தது நாங்கள் விலகி கொண்டபடியால் வாகனம் திரும்பி செல்லும் போது அதில் உள்ள வண்டியை ஓட்டிய சரவணகுமார், செந்தில்குமார் மற்றும் உரிமையாளர் மகாலிங்கம் ஆகியோர்கள் எங்களை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி போகும்போது நாங்கள் பின்னால் மடக்கி பிடித்தோம். சரவணகுமார் மற்றும் செந்தில் குமார் ஆகியோர்களை மட்டும் பிடித்துவிட்டோம். மகாலிங்கம் தப்பிவிட்டார். வண்டியை சோதனை செய்த போது அதில் ரூ.3,000/- மதிப்புள்ள குளத்து மணல் இருந்தது. அத்தாட்சியில் கையெழுத்திட பொதுமக்கள் யாரும் முன்வராததால் நாங்களை கையொப்பமிட்டு வண்டியையும் அதில் இருந்த குளத்து மணலையும் நிலையம் கொண்டு வந்து ஆஜர் செய்தோம். காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலவாது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும். உதவி ஆய்வாளர் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ரோந்திற்கு எத்தனை பேர் எத்தனை இருசக்கரவானத்தில் சென்றீர்கள் என்றால் 3

பேர் இரண்டு வாகனத்தில் சென்றோம். காவல்நிலையத்திற்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு நேரத்தல் செல்லலாம் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும் 10 நிமிடத்தில் செல்லலாம்.
நீங்கள் சொன்ன மாதிரி எதிரிகள் உங்களை மிரட்டிவில்லை, வாகனத்தை ஏற்ற முயற்சி செய்யவில்லை, கொல்லமல் விடமாட்டேன் என மிரட்டவில்லை, கெட்ட வார்ததை பேசவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை மேல்அதிகாரிகள் கேட்டு கொண்டதால் புள்ளிவிவரத்திற்காக வழக்கு போட்டு உள்ளீர்கள் என்றால் சரியல்ல. அத்தாட்சி காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யபட்டது என்றால் சரியல்ல. பொய்யான சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் தனி நபர் சாட்சிகளை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் பொய்யாக இந்த சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.376/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | முருகன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of August 2021.

நான் தற்போது கடையநல்லூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 14.08.2016 ம் ஆண்டு 11.30 மணியளவில் மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் பணியில் இருந்த போது போன் மூலம் கிடைத்த ரகசிய தகவலின் படி 12.00 மணியளவில் தண்ணீா் இல்லாத அரசனார்குளம் மணல் திருட்டு சம்பந்தமாக நான் மற்றும் முதல்நிலை காவலா் 2340 திரு.ஜெயகுமார் மற்றும் 1652 முத்துகிருஸ்ணன் ஆகியோர் சகிதம் ரோந்து செய்து கண்காணித்து வரும் போது மேற்படி குளத்தில் இருந்து சந்தேகத்தின் படி எதிரே வந்த மகேந்திரா நிஸான் TN 74 480 பதிவெண் கொண்ட வாகனத்தை மறித்த போது மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் நிறுத்தாமல் எங்கள் மீது மோத வந்தார். சுதாரித்து கொண்ட நாங்கள் மேற்படி வாகனத்தை சுற்றி வளைத்து மடக்கிய போது மேற்படி வாகனத்தில் இருந்த டிரைவர் மற்றும் லோடுமேன், அதன் உரிமையாளர் ஆகியோர் வாகனத்தில் இருந்து இறங்கி ஓடும் போது இன்றைக்கு தப்பிச்சிவிட்டுங்க போலிஸ்கார நாய்களா உங்களை திரும்பவும் வாகனத்தை ஏற்றி கொல்லாமல் விடமாட்டேன் என வர்மித்துவிட்டு ஓடியவர்களை மடக்கி பிடிக்க வாகனத்தின் ஓட்டுனர் சரவணகுமார் (வயது 28), த/பெ.சக்கரவர்த்தி, மற்றும் செந்தில்குமார் த/பெ.சேர்மன், உரிமையாளர் பெயர் விசாரிக்க மகாதேவன் த/பெ.சொல்லமுத்து என தெரியவந்தது. மேற்படி வாகனத்தையும், சொத்தையும் கைபற்றி அத்தாட்சி தயாரித்த போது பொதுமக்கள் யாரும்முன் வந்து கையெழுத்து செய்யாததால் நானும், மற்றும் தலைமைகாவலர் ஜெயகுமார், தலைமைகாவலர் முத்துகிருஷ்ணன் ஆகியோர் கையெபாப்பமிட்டோம். மேற்படி வாகனத்தின் குளத்துமணல் இருந்தது. அதன் மதிப்பு சுமார். ரூ.3,000/- ஆகும் மேற்படி வாகனம் மற்றும் சரவணகுமார், செந்தில்குமார் ஆகியோர்களை

13.00 மணிக்கு மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தல் பொறுப்பிலிருந்த உதவி ஆய்வாளரிடம் தனி அறிக்கையுடன் சமா்பித்து மேற்படி எதிரிகள் எங்களை பணி செய்யவிடாமலும், மிரட்டியும் அரசு அனுமதியின்றி கடத்தி வந்த திருட்டு மணலையும் ஆஜா் செய்து நடவடிக்கை எடுக்க உதவி ஆய்வாளரிடம் தனி அறிக்கை உடன் அறிக்கை செய்தோம். காட்டப்படும் அத்தாட்சி நான் தயாா் செய்து தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆகும். தனி அறிக்கை நான் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த தனி அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். காட்டப்படும் புகைப்படத்திலுள்ள வாகனம் நான் கைபற்றியது அந்த புகைப்படங்கள் சா.பொ.1 மற்றும் 2 ஆகும். ஆஜா் எதிரிகள் தான் இந்த வழக்கில் சம்பவத்தின் ஈடுபட்டது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளா் நான்குநேரி வட்டம் என்னை விசாரணை செய்தாா்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ரகசிய தகவல் சொன்ன நபா் விபரம் யாா் என்று சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது அவா் பெயா் சொல்லவில்லை. ரோந்திற்கு எந்த வாகனத்தல் சென்றீா்கள் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றோம். நீங்கள் சொன்ன மாதிரி எதிரிகள் உங்களை மிரட்டிவில்லை, வாகனத்தை ஏற்ற முயற்சி செய்யவில்லை, கொல்லமல் விடமாட்டேன் என மிரட்டவில்லை, கெட்ட வாா்தை பேசவில்லை என்றால் சாியல்ல. நீங்கள் பொய்யாக இந்த சாட்சி சொல்கிறீா்கள் என்றால் சாியல்ல. நீங்கள் ரோந்து போன விபரம் உங்கள் பொது நாட்குறிப்பில் துலங்குமா என்றால் துலங்கும். எதிரிகள் எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை மேல்அதிகாரிகள் கேட்டு கொண்டதால் புள்ளிவிவரத்திற்காக வழக்கு போட்டு உள்ளீா்கள் என்றால் சாியல்ல. வீட்டில் இருந்த 2, 3 வது எதிரிகளை கைது செய்து உள்ளீா்கள் என்றால் சாியல்ல. சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் தனி நபா் சாட்சிகளை வழக்கில் சோ்க்கவில்லை என்றால் சாியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**